முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1619

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.03.2024**, செவ்வாய்கிழமை

1. தர்ம வேலிகொண்ட அரங்கனே
   தவபலம் கொண்ட தேசிகனே
   பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
   பிரணவக்குடில் படைத்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மாசி மாதம் 22 ம் நாள், 05.03.2024, செவ்வாய்கிழமை)
   வரமென அரங்கன் திருவடி பற்றி
   வையகத்தில் உலகோர் ஞானம் பயின்றால்
3. அறமாக உலகெலாம் ஆற்றல்பெருகி
   இனிதே ஆன்மீக ஞானவான்கள்
   ஆளுகின்ற ஞான பூமியாக
   அற்புதம்தனை இந்த பேருலகம் அடைய நேரும்
4. அடையவே உலகமாற்றம் நிகழ்த்தும் வண்ணம்
   ஆறுமுகன் என் அவதாரம் எடுத்திருக்க
   தடையற கலியுக மக்கள்
   தவராஜன் வாழ் பிரணவக்குடில் நோக்கி வந்தால் போதும்
5. வருகின்ற காலமே வையகத்தில்
   ஞானசித்தர் காலம் பெருமைமிக்க
   ஞானவான்கள் ஆட்சிக்காலம்
   பிசகின்றி இனிதே அரங்கேறும்
6. அரங்கேற அரங்கன் படை உலகெலாம்நிரம்பி
   ஆக்கமுடன் அன்னதான சேவையாற்றி
   தேக்கமின்றி ஆறுமுகன் என் வழிபாட்டையும்
   தேசிகனின் நாமஜெபத்தையும் முழங்கிவர

7. வருகவே உலகோர் வழி மொழிந்து
வணங்கி வந்தால் போதும்
வையகத்தில உலக மாற்றம்
இனிதே நடந்தேறும்

8. தயவான அரங்கன் கொள்கைதான்
தரணியை ஆளக் கூடும்
நேயமான அரங்கன் தொண்டர்படைகள் தான்
நிலவுலகையே நிர்வகிக்கவும் ஞானவழி மாற்றவும் கூடும்

9. ஆகவே உலகோர் அரங்கன் ஞானப்படைகளை
ஆதரித்து அனுசரித்து உலகோர் ஏற்று
ஆற்றல்பட இணைந்து வந்தால் போதும்
உலகமாற்றம் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–